# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**மனு எண். 1510/நகராட்சி/2017**

**நாள் : 01/10/2018**

**திரு சி.ச. சிபிசக்கரவர்த்தி,**
**சிதம்பரம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**ஆணையர்,**
**சிதம்பரம் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

## ஆணை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி, எண்.19, மாலைக்கட்டி தெரு முகவரியில் வசிக்கும் திரு சி.ச சிபிசக்கரவர்த்தி அவர்களின் 08.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, 23.06.2017 நாளிட்ட ஆணை எண். 171/2017–இல் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு ஆணையிடப்படுகிறது.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி, (வார்டு எண்–5, பிளாக் எண்.10) சோமசுந்தரம் தெரு, கதவு எண்.12, நகர நில அளவை எண்.774 மற்றும் மன்னார்குடி தெரு, கதவு எண். 15–A, நகர நில அளவை எண்.778 ஆகிய நிலங்களில் கட்டட வரைபடத்திற்கு மாறாகக் கட்டப்பட்ட கட்டட விதிமீறல்களுக்கு, சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளர்களுக்கு 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 205(1) (2)–இன் கீழ், 19.03.2010 நாளிட்ட முதல் அறிவிப்பும், சட்டப்பிரிவு 205 (3)–இன் கீழ், 08.12.2016 நாளிட்ட இரண்டாவது அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளதாக 24.01.2018 நாளிட்ட நகராட்சி ஆணையரின் கடிதம் எண்.2014/2017/F1–இல் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், கட்டட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட கட்டடங்களுக்கு 1971–ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம், பிரிவுகள் 47(A) மற்றும் 49–இன் கீழ் பெறப்படவேண்டிய எந்த அனுமதியும் பெறாமல் இருந்ததால் அச்சட்டப் பிரிவுகள் 56 மற்றும் 57 –இன் கீழ் கட்டடத்திற்கு பூட்டுதல் மற்றும் முத்திரை வைக்கும் அறிவிப்பு 04.01.2018–இல் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவுகளின் படி வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்துள்ள நிலையில், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை

சமர்ப்பிக்கும்படி ஆணையிடப்படுகிறது. மேலும், இவ்விரு கட்டட நேர்வுகளிலும் சொத்துவரி நிலுவைத் தொகை ரூ. 1,39,218/– (ரூ.89,668 + ரூ49,550) செலுத்தப்பட வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகை வசூலிக்கப் பட்ட விவரத்தினையும் தெரிவிக்குமாறு ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 1–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   சிதம்பரம் நகராட்சி,
   சிதம்பரம்,
   கடலூர் மாவட்டம்.

2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   செங்கல்பட்டு மண்டலம்,
   மேற்கு தாம்பரம்,
   சென்னை – 600 045.

3. திரு சி.ச. சிபிசக்கரவர்த்தி,
   19, மாலை கட்டி தெரு,
   சிதம்பரம் – 608 001,
   கடலூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி